**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.28/2023**

**2026 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 24 ஆம் நாள் வாதிகள் தரப்பு சாட்சியான வா.சா.2-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காமாட்சி | ஜாதி | : | |
| க.பெ | : | முருகன் | தொழில் | : | கடலை வியாபாரம் |
| கிராமம் | : | அய்யங்கோட்டை | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 50/2026 |
| தேதி | : | 24.02.2026 | | | |

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் படித்துள்ளீர்களா என்றால் படிக்கவில்லை. நீங்கள் பிறந்த ஊர் எது என்றால் தேவதானப்பட்டி அருகில் உள்ள பெருமாள்கோவில்பட்டி ஆகும். உங்களுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் சுமார் 30 வருடங்களுக்கு முன்னால் நடந்தது. திருமணத்திற்கு முன்பாக நீங்கள் அய்யங்கோட்டைக்கு வந்துள்ளீர்களா என்றால் வந்துள்ளேன். என் அம்மா அய்யங்கோட்டையில் தான் பிறந்தார்கள். உங்களுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 குழந்தைகள் உள்ளார்கள். உங்களுக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். உங்கள் இளைய மகளை வாதி லதாவின் உடைய இளைய மகனுக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான். உங்கள் இளைய மகளின் திருமணத்திற்கு பிறகு தான் வாதி லதாவை தெரியும் என்றால் சரியல்ல, என் மகளின் திருமணத்திற்கு முன்பே லதாவை தெரியும். லதாவை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 30 வருடமாக தெரியும்.

உங்களுக்கு லதாவை எவ்வாறு தெரியும், அவர் உறவினரா என்றால் இல்லை, பழக்கத்தின் மூலம் தெரியும். எந்த வகையில் லதா உங்களுக்கு பழக்கம் என்றால் என் கணவருடன் லதாவின் கல்யாணத்திற்கு சென்றேன், அதன் மூலம் பழக்கம். பத்திரிகக்கை கொடுக்கவில்லை. லதா உங்களுக்கு நேரடியாக பழக்கம் இல்லை என்றால் சரிதான், என் கணவரும் லதாவின் கணவரான கணேஷ்பாண்டியும் அதிக பழக்கம் உண்டு, அதன் மூலம் எனக்கு தெரியும். லதாவிற்கு ஏற்கனவே திண்டுக்கல், பாலகிருஷ்ணபுரத்தை சேர்ந்த பொன்னர் என்பவருடன் ஏற்கனவே திருமணம் நடந்த விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

பொன்னருக்கும், லதாவிற்கும் பிறந்த மகன் தான் உங்கள் மருமகன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் பெண் கொடுக்கும்போது மாப்பிள்ளையின் தாய், தந்தை யார் என்று விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கணேஷ்பாண்டி வந்தார். உங்கள் மகளுக்கு லதாவின் மகனுடன் மில்லில் வேலை பார்க்கும்போது பழக்கம் ஏற்பட்ட காரணமாக தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல, பழக்க வழக்கத்தின் அடிப்படையில் பெண் கேட்டு வந்தார்கள்.

உங்கள் சம்மந்தம் இல்லாமல் அய்யங்கோட்டைக்கும், அழகர்நாயக்கன்பட்டி புதுப்பட்டிக்கும் இடையே பெண் கொடுத்து பெண் எடுத்த வகையில் இரு ஊருக்கும் உறவு உண்டா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. திருமணம் ஆன நாளிலிருந்து அய்யங்கோட்டையில் தான் நீங்கள் குடியிருந்து வருகிறீர்கள் என்றால் சரிதான். லதாவின் திருமணத்தில் உங்களையும், உங்கள் கணவரையும் தவிர அழகர்நாயக்கன்பட்டி ஊர் பெரியவர்கள் யாரும் கலந்துகொண்டார்களா என்றால் எனக்கு தெரியாது. லதாவின் மகனுக்கு உங்கள் பெண்ணை கொடுத்த காரணத்தினால் வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வாதி லதா அழைத்தன் பேரில் தான் நீங்கள் சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து உங்களுக்கு சாட்சியம் அளிக்க சம்மன் வரவில்லை என்றால் சரிதான்.

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

உங்களுக்கு லதாவை தெரியுமா என்றால் தெரியும். லதா முதலில் ஒரு திருமணம் செய்தார், பின்னிட்டு மற்றொரு திருமணம் செய்தார் என்றால் முதலில் திருமணம் செய்தது எனக்கு தெரியாது. முதல் திருமணத்தின் மூலம் லதாவிற்கு குழந்தைகள் உள்ளதா என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor